சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.139/2024

05.03.2026

வா.சா.1 திரு. அண்ணாதுரை, த/பெ. ராமச்சந்திரன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ரயில்வே போலீசாக வேலை பார்க்கிறேன். நான் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இடம் மனைப்பிரிவுகள் செய்யப்பட்ட இடம் என்றால் சரிதான். அந்த இடம் அரசாங்கத்தால் மனைபிரிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். அதில் மொத்தம் 32 மனைகள் உளளது. ஒவ்வொரு மனையும் 1076 சதுரடி என்றால் சரிதான். நான் மனை எண் 14, 19 ஆகியவற்றை இருவேறு தேதிகளில் இருவேறு பட்டாக்கள் மூலம் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். என் பெயரில் உள்ள கிரய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மனை எண் 14 ஐ எந்த தேதியில் கிரயம் வாங்கினேன் என்று ஞாபகமில்லை. என் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பெயரில் உள்ள கிரய ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கு தனியாக காரணம் உள்ளதா என்றால் இல்லை. என் பெயரில் உள்ள கிரய ஆவணத்தை தாக்கல் செய்தால் நான் கிரயம் பெற்ற மனையின் அளவு 1076 சதுரடி என்று உண்மை தெரிய வரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனை எண் 14ல் நான் கிரயம் பெற்ற மொத்த சொத்தின் விஸ்தீரணம் 100 சதுர மீட்டர். மனை எண் 14 ல் நான் கிரயம் பெற்ற சொத்தில் 924 ஐ விற்பனை செய்துள்ளேன் என்றால் விற்பனை செய்யவில்லை. மனை எண் 14 ல் உள்ள இடத்தை தான் செல்போன் டவருக்கு குத்தகைக்கு கொடுத்துள்ளேன். மனை எண் 14ல் செல்போன் டவர் அமைப்பதற்கு 400 சதுரடி குத்தகைக்கு கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி என் மீது இந்த வழக்கிற்கு முன்ப அ.வ.எண்.109/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால்சரிதான். அந்த வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் பிரதிவாதி ஏற்கனவே தாக்கல் செய்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். செல்போன் டவர் பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தையும் ஆக்கிரமித்துதான் போட்டுள்ளார்கள்

என்றால் சரியல்ல. மனை எண் 14 ல் பிரதிவாதிக்கு கிரயம் செய்துக்கொடுத்தது போக 152 சதுரடி மட்டுமே பாத்தியப்பட்டது என்றாலும் 400 சதுரடி பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்தமான 248 சதுரடியை ஆக்கிமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பெயரில் கிரயம் வாங்க கிரயம் வாங்குவதற்கு முன்பு மேலதிகாரியிடம் முன் அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. உயர் நீதிமன்ற உத்தரவின் படி நிலம் அளவு செய்யப்பட்டது என்றால் நிலஅளவீடு செய்ய வந்தார்கள் நான் ஆட்சேபணை செய்துவிட்டு வந்துவிட்டேன். அதற்கு பின்பு அளந்துள்ளார்கள். உயர்நீதிமன்ற உத்தரவு படிதான் அளவீடு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். அளவீடு செய்ய எனக்கு ஆட்சேபணையில்லை. செல்போன் டவருக்கு தனியார்களை அழைத்து வந்து சொத்தை ஆக்கிரமித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி பிரதிவாதி காவலர் என்பதால் அவரின் மீது பொய்யான புகார் கொடுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லியுள்ள வழக்குமூலம் தவறானது என்றால் சரியல்ல. எதனடிப்படையில் தாவாவின் மதிப்பு ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் பிரதிவாதிக்கு எதிராக மோசடி செய்து சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறேன் என்றால் சரியல்ல. நான் குத்தகைக்கு விட்டுள்ளதால் 1 ஆம் பிரதிவாதி தற்போது தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கோ 2 ஆம் பிரதிவாதிக்கோ இல்லாமல் அத்துமீறி உள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு காம்பவுண்ட் சுவர் இல்லை கம்பிவேலி அமைத்துள்ளேன். நான் சொல்வது போல் கம்பிவேலி இல்லை என்றாலும் பிரதிவாதிகள் வெளியூர் சென்றிருந்த சமயத்தில் கம்பி வேலி போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. செல்போன் டவர் அடி டவர் சுற்றளவு எவ்வளவு என்றால் தெரியாது. நான் எனக்கு சொந்தமான இடத்தை குத்தகைக்கு விடாமல் பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தை குத்தகைக்கு விட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கெல்லை, விஸ்தீரணம், வழக்குமூலம் தவறானது என்றாலும் தாவாபடி எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள கிரய பத்திரத்தை தாக்கல் செய்தால் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. செல்போன் டவருக்கு

உண்டான வாடகை என் பெயரில்தான் வழங்கப்பட்டு வருகிறது. நான் அரசு ஊழியர் என்பதால் செல்போன் டவர் குத்தகைக்கு விட்டு வாடகை பெற கூடாது என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.